மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.14,251,04,32,000/–, மூலதனக் கணக்கில் ரூ.301,72,29,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.5,40,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

5. தகவல் கோரல்

கண்டலேறுவிலிருந்து சென்னைக்கு வரும் கிருஷ்ணா நீர் கால்வாயிலுள்ள உடைப்பைச் சீர் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, என்ன சொல்ல வருகிறீர்கள்?*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டலேறு அணை உடைப்புப் பற்றி ஏற்கெனவே கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறோம். இன்றைக்கு அதனை எடுத்துக்கொள்வதாக எங்களுக்குச் செய்தி வந்தது. அதை இன்றைக்கு எடுத்துக்கொண்டால் பரவாயில்லை. சென்னையில் ** அதனால் அதை இன்றைக்கே எடுத்துக்கொண்டால் நல்லது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. நீங்கள் கண்டலேறு அணை பிரச்சினை குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவாருங்கள். அதுதான் அவைக்குறிப்பில் இருக்கும். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ குற்றச்சாட்டு சொல்லவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். சென்னை மக்களின் குடிநீர்த் தேவைக்கு நிறைவான தண்ணீர் இருக்கிறது. இன்னும் 7 மாதங்களுக்குத் தேவையான தண்ணீர் பாதுகாப்பாக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2012 ஏப்ரல் 18]

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். (குறுக்கீடு) நான்* Zero hour*–ல் ..... (குறுக்கீடு) நீங்கள் சொன்ன குற்றச்சாட்டு அவைக்குறிப்பில் இருக்காது. அந்தப் பிரச்சினை குறித்து நீங்கள் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறீர்கள். (குறுக்கீடு) அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, பேசுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் பேசுங்கள். (குறுக்கீடு) அவருக்கு* mike *கொடுங்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டலேறு அணையிலிருந்து தமிழகத்திற்குத் தண்ணீர் தருவது 'தெலுங்கு–கங்கைத் திட்டம்'. ஆந்திர மாநிலம், வரதபாளையம் அருகேயுள்ள ஒப்பலமேடு மதகு வெள்ளத்தால் சேதமடைந்து, மதகினுடைய தடுப்புச் சுவர் கால்வாயில் விழுந்துவிட்டது. அதன் காரணமாக தண்ணீரும் தடுக்கப்படுகிறது. உடைந்த அந்தக் கால்வாய்ப் பகுதியிலிருந்து தண்ணீர் வீணாகிப் போய்க்கொண்டிருக்கிற நிலையும் இன்றைக்கு இருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரையில், வெளி மாவட்டங்களிலிருந்து மக்கள் சென்னைக்கு அதிகமாக வருகின்ற வாய்ப்பு இருக்கிறது. அதேநேரத்தில், இப்பொழுது ஏப்ரல் மாதத்திலேயே வெயில் அதிகமாக இருக்கிறது. வெயில் அதிகமாக, அதிகமாக தண்ணீர் வறண்டுபோகிற இயற்கையான நிலை ஏற்படும். ஆனால் 'தெலுங்கு–கங்கைத் திட்டத்தின்'மூலம் சென்னைக்குத் தண்ணீர் வரவில்லையென்று சொன்னால், ** நான் குற்றச்சாட்டுச் சொல்லவில்லை. ** சொன்னேன். எனவே, அரசு இது சம்பந்தமாக விரைந்து செயல்பட்டு, மதகைச் சீர் செய்து, தூர் வாரினால்தான், அந்தத் தண்ணீர் இங்கு வருவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது.*

*நேற்றையதினம்கூட, ** (குறுக்கீடுகள்) நான் ஒன்றும் புதியதாகச் சொல்லவில்லை.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2012 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ.வ. வேலு, நீங்கள் அரசின் கவனத்திற்கு கொண்டு வாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு நல்ல பிரச்சினையை இந்த அவையில் எடுத்து வைப்பதற்காக, நீங்கள் அவருக்கு வாய்ப்புக் கொடுத்தீர்கள். அந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசி முடித்து விட்டு, அரசின்மீது களங்கம் கற்பிப்பதற்காகவே, பல்வேறு குற்றச்சாட்டுகளை அவர் ஆதாரமின்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார். ** தயவு செய்து அந்தக் கால்வாய் உடைப்பை மட்டும் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொண்டு, அதற்கு பதில் சொல்வதற்குரிய வாய்ப்பை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற கருத்துகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, please sit down. நீங்கள் என்னுடைய அறைக்கு வந்து, இந்தப் பிரச்சினையைக் கவன ஈர்ப்பாக எடுக்க வேண்டுமென்று கேட்டீர்கள். நானும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் இந்தப் பிரச்சினை குறித்து எடுக்க வேண்டுமென்று கேட்டபோது, அவரும் அதற்குத் தயாராக இருந்தார். நான் இப்பொழுது Demand move செய்ய அமைச்சரை அழைத்துவிட்டேன். காலையில் நான் திரு. சக்கரபாணி அவர்களைக் கூப்பிட்டு, இந்தப் பிரச்சினையை இன்று எடுக்கப்போகிறேன் என்று சொன்னேன். (குறுக்கீடு) அப்போதாவது நீங்கள் alert–ஆக இருந்திருக்க வேண்டும். ஆனால், நீங்கள் வேறு ஏதோ யோசனையில் இருந்துவிட்டு, Demand–ஐ move செய்த பிறகு நீங்கள் 'கண்டலேறு', 'கண்டலேறு' என்று சொல்கிறீர்கள். அப்போதுகூட நான் Demand move செய்வதை நிறுத்திவிட்டு, இந்தப் பிரச்சினையை உங்களுக்காக எடுக்கிறேன். நீங்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதை விட்டு,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2012 ஏப்ரல் 18] [பேரவைத் தலைவர்]

விட்டு அரசின்மீது குற்றஞ்சாட்டுவது கொஞ்சம்கூட நல்லதல்ல. நீங்கள் வெளியில் சென்று ஜனநாயகம் பற்றிப் பேசுகிறீர்கள். ஆனால், எந்த அளவிற்கு ஜனநாயகம் இந்த அவையில் நிலை நாட்டப்படுகிறது என்பதை முதலில் நீங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும். Please sit down. *(குறுக்கீடு)* நீங்கள் அந்தப் பிரச்சினை குறித்துச் சொன்ன வார்த்தைகள் மட்டும் அவைக்குறிப்பில் இருக்கும். குற்றச்சாட்டுகள் எதுவும் அவைக்குறிப்பில் இருக்காது. நீங்கள் இந்தப் பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியைக் கோட்டைவிட்ட கடந்த கால அரசில் இருந்தவர்கள், கண்டலேறுவைப் பற்றி அவர்கள் பேசுவது வேடிக்கையாக உள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். *(குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு இதய தெய்வம்...... *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் என்ன சொல்கிறார் என்பதை மட்டும் கேட்டுக்கொள்ளுங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். *(குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், நல்ல பதிலைத்தான் சொன்னார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* நான் சொல்கிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசட்டும். *(குறுக்கீடு)* Please sit down. *(குறுக்கீடு)* அவரைப் பேச விடுங்கள். *(குறுக்கீடு)* நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நடுவர் மன்றம் 16 வருடங்களுக்குப் பிறகு, அதனுடைய இறுதித் தீர்ப்பினை வழங்கியது. அதெல்லாம் உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கும். *(குறுக்கீடுகள்)* நான்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 ஏப்ரல் 18

சொல்வதைக் கேளுங்கள். காவிரி நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பினை வழங்கும்போது, தமிழகத்திற்கு, கர்நாடகத்திற்கு, கேரளாவிற்கு, பாண்டிச்சேரிக்கு இவ்வளவு இவ்வளவு டி.எம்.சி. அடி தண்ணீர் என்று வரையறுத்துச் சொன்னது. ஆனால், அந்த உத்தரவினை அமல்படுத்த வேண்டியது மத்திய அரசினுடைய பொறுப்பு. மத்திய அரசினுடைய அரசிதழில் அதை வெளியிட்டிருக்க வேண்டும்.

10 ஆண்டுகளாக மத்தியில், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசில் நீங்கள் அங்கம் வகித்துக் கொண்டிருக்கிறீர்கள். அந்த உத்தரவை அரசிதழில் வெளியிட ஒரு முன் முயற்சியையாவது நீங்கள் எடுத்தீர்களா? அதைத்தான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், 'கோட்டை விட்டீர்கள்' என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள். (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசுவதற்கு நிற்கிறார்; மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. உறுப்பினர் மாண்புமிகு திரு. எ.வ. வேலு அவர்கள், இங்கே உரையாற்றுகின்றபோது, அவர் பேசிய சொற்கள், 'குற்றச்சாட்டு' என்று சொல்லி, நீங்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறீர்கள். அதேபோல, அதற்குப் பதில் சொல்லக்கூடிய அமைச்சர் அவர்கள், பொத்தாம்பொதுவாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறபோது, அது எப்படி அவைக் குறிப்பிலே இடம்பெற முடியும் என்றுதான் நான் கேள்வி கேட்கிறேன். எனவே, அதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், அதிலே உள்ள previous history–யைத்தான் சொல்கிறார். (குறுக்கீடுகள்)

2012 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்வது, குற்றச்சாட்டு அல்ல. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசியதற்குப் பிறகு, நான் வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது குற்றச்சாட்டு அல்ல. நீங்கள், மத்திய அரசில், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசில் அங்கம் வகித்தீர்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. இராமகிருஷ்ணன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. நா. இராமகிருஷ்ணன், அவை முன்னவர் அவர்கள் பேசியதற்குப் பிறகு நான் வாய்ப்புத் தருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: காவிரி நடுவர் மன்றம், அதனுடைய இறுதித் தீர்ப்பினை வழங்கிவிட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்ன சொன்னார்கள்? முதலில், காவிரி நடுவர் மன்றம் வழங்கிய இறுதித் தீர்ப்பினை உறுதி செய்யவேண்டும். அதற்கு மத்திய அரசினுடைய Gazette–ல் அதனை வெளியிட வேண்டும்; மத்திய அரசினுடைய மந்திரி சபையிலே நீங்கள் அங்கம் வகிக்கிறீர்கள். மந்திரி சபையில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் மூத்த தலைவராக இருக்கிற திரு. கருணாநிதி அவர்கள், அதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிக்கை விட்டிருந்தார்கள். அதனை நீங்கள் செயல்படுத்தாமல், கோட்டை விட்டுவிட்டீர்கள். அதைத்தான், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள். (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும், அதற்கும் என்ன சம்பந்தம்? இல்லை, அதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்றால், தனியாக விவாதிப்பதற்கு நேரம் தாருங்கள்; நாங்கள் விவாதிக்கிறோம். அவர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் எப்படி உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவருடைய உரையில் சில குறிப்புகளை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கினீர்களோ, அதைப்போல், அமைச்சருடைய உரையிலிருந்த அந்தக் குறிப்புகளையும் நீக்க வேண்டும். இல்லையென்றால், நாங்கள் அதை அனுமதிக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) சம்பந்தம் இருக்கிறது. அதாவது, சென்னைக்குக் குடிநீர் வழங்குகின்ற நீராதாரங்களில் கைவசம் இருப்பு முழுமையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்களுக்கு உண்மையாகவே மனசாட்சி இருந்தால், அப்படிச் சொல்லமாட்டார். அவர் இன்றைக்குக் காலையில்கூட, shower–ஐ நன்றாகத் திருப்பி விட்டுவிட்டு, சென்னை மாநகரத் தண்ணீரிலே குளு குளுவென குளித்துவிட்டுதான் இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறார். 7 மாதங்களுக்குத் தேவையான தண்ணீர் இருப்பிலே இருக்கிறது. அப்படியிருக்கும்போது, ** எப்படி அவர் சொல்லலாம்? அதன் தொடர்ச்சியாகத்தான், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, ‘காவிரி நீரை நீங்கள் கோட்டை விட்டுவிட்டீர்கள்’ என்று சொன்னார். (குறுக்கீடுகள்) ‘காவிரி நீரைக் கோட்டை விட்டவர்கள் நீங்கள்; காவிரி நீரைக் கோட்டை விட்டவர்கள், எப்படி கண்டலேறு பற்றிச் சொல்வதற்கு யோக்கியதை இருக்கிறது?” என்றுதான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2012 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அளித்த விளக்கம் சரியானது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்* previous history–ஐ *சொல்வதனால், உங்களுக்கு என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *தமிழகத்தின் உரிமையை விட்டுக் கொடுக்கவோ, (குறுக்கீடுகள்) சமரசம் செய்திடவோ ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) தமிழகத்திலே கடந்த கால ஆட்சியிலே, இழந்த உரிமைகளை மீட்பதற்காக வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்திலே பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளார்கள். (குறுக்கீடுகள்) தமிழகத்தின் சரித்திரத்திலே ஒரு புதிய சரித்திரம் படைக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், காவிரியில் கடந்த ஆண்டு ஜூன் மாதம், 6 ஆம் தேதி தண்ணீர் திறந்துவிட்டு, கடைமடை வரை தண்ணீர் சென்றடைய நடவடிக்கை எடுத்து, நல்ல விளைச்சலைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)*

அதேபோல, கிருஷ்ணா நதிநீரைப் பெறுவதிலே, ஒரு சாதனையாளராக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் விளக்கமாகச் சொல்லியதற்குப் பிறகு, இதில் வேறு என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்)*

முற்பகல் 11–35

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *அதேபோல, கிருஷ்ணா நதி நீரைப் பெறுவதிலே (குறுக்கீடுகள்) இந்த வருடம் ஒரு சாதனை அளவாக, இதுவரையில் இல்லாத அளவாக, ஏறக்குறைய 8.5 டி.எம்.சி. அடி தண்ணீரை தமிழகத்திற்குப் பெற்றுத்*

தந்திருக்கிறார்கள். வருகின்ற காலங்களிலே வாய்க்கால் சரி செய்யப்பட்டு, இதுவரையில் இல்லாத அளவாக, சாதனை அளவாக, (குறுக்கீடுகள்) முழு அளவான 12 டி.எம்.சி. அடி தண்ணீரையும் பெற்றுத் தருவதிலே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதியாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

கண்டலேறு அணையிலிருந்து பூண்டிக்கு வரும் கிருஷ்ணா வாய்க்காலிலே, 114-வது கிலோ மீட்டர் எல்லையில் உள்ள வாய்க்காலிலே உடைப்பு ஏற்பட்டு, ஆந்திரப் பிரதேச அரசால் அதைச் சரிசெய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, கடந்த கால அரசைப்போல தூங்காமல், என்றைக்கும் மக்களுக்காக விழித்துக் கொண்டிருக்கிற அரசு. அதற்கான உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் இந்த மாத இறுதிக்குள் முடிந்துவிடும். மீண்டும் அந்த 4 டி.எம்.சி. அடி தண்ணீர் பெறப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். இப்பொழுது 7 மாத காலத்திற்கு சென்னைக்கு குடிநீர் வழங்குவதற்குப் போதுமான தண்ணீர் இருப்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம் (குறுக்கீடு) திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2012 ஏப்ரல் 18]

திருமதி எஸ். விஜயதரணி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது விவாதத்தைத் திசை திருப்ப வேண்டாம். நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது. கண்டலேறுவிலிருந்து திடீரென்று திசை திரும்பிவிட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், உட்காருங்கள். ஒரு நிமிடம், சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடு) இருங்கள்.

கண்டலேறு பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் ஒரு point–ஐ எழுப்பி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் கொடுக்கும்போது, அதை அடிப்படையாகக் கொண்டு ஒரு சிறிய அளவிலான விவாதம் நடைபெற்றது. இப்பொழுது திடீரென்று காவிரிப் பிரச்சினை பற்றி விரிவாக விவாதம் பண்ணினால் சபை நடவடிக்கை deviate ஆகிவிடும். விட்டுவிடுங்கள். 2012–2013 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள். (குறுக்கீடு) மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் மேலும் விவாதம் வேண்டாமென்று சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசிய அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து எடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) நான் இங்கே ஒரு கருத்தைச் சொல்கிறேன். கண்டலேறு பிரச்சினை பற்றி விவாதிக்கும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன ஒரு சில கருத்துகளுக்கு அவர்களும் ஒரு சில கருத்துகளைச் சொன்னார்கள். அதோடு முடிந்துவிட்டது. காவிரிப் பிரச்சினை என்பது வேறு, இது பற்றிய விவாதத்தைத் தனியாக வைத்துக்கொள்ளலாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS